டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 7.11.2025 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 114 - Madurai | Online Edition

## கூட்டுறவு நிறுவனங்களுக்கான உலகளாவிய தரவரிசை

# அமுல் மற்றும் இந்திய விவசாயிகள் உரக்கூட்டுறவு அமைப்புக்கு பிரதமர் வாழ்த்து

புது தில்லி, நவ.6

கூட்டுறவு நிறுவனங்களுக்கான உலகளாவிய தரவரிசையில் முதலாவது மற்றும் இரண்டாம் இடம் பிடித்துள்ள அமுல் மற்றும் இந்திய விவசாயிகள் உரக்கூட்டுறவு அமைப்புக்கு (IFFCO) பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்திய கூட்டுறவுத்துறை துடிப்புமிக்கது என்றும், பலரது வாழ்க்கை தரத்தை மாற்றியமைத்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார். எதிர்வரும் காலங்களில் இத்துறையை மேலும் ஊக்குவிக்க தங்கள் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் மோடி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் பதிவிட்டிருப்பதாவது, அமுல் மற்றும் ஐஎஃப்எஃப்சிஓ கூட்டுறவு நிறுவனங்களுக்கு வாழ்த்துகள். இந்திய கூட்டுறவுத்துறை துடிப்புமிக்கது, பலரது வாழ்க்கை தரத்தை மாற்றியமைத்து வருகிறது. எதிர்வரும் காலங்களில் இத்துறையை மேலும் ஊக்குவிக்க எங்கள் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



# விவசாயிகள் தனித்துவ அடையாள எண் இலவசமாக பதிவு செய்யலாம் : மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

அரியலூர், நவ.6

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம் நில உடைமைகளை உள்ளடக்கிய விவசாயிகளின் தரவுகளை சேகரிப்பதற்கு பிரத்யேகமான விவசாயிகள் பதிவேடு செயலி (Mobile App) உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலி மூலம் விவசாயி களின் நில உடைமைகளை சரிபார்த்து விவசாயி களுக்கென தனித்துவமான அடையாள எண் வழங்கும் சிறப்பு முகாம் அரியலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் நடைபெற்று வருகிறது.

இந்த முகாமில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகத் துறை சார்ந்த கள அலுவலர்கள் கிராமங்களுக்கு வருகை தந்து விவசாயிகளுக்கான தனித்துவமான அடையாள எண் வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். அரியலூர் மாவட்டத்தில் மொத்தம் 1,32,231 விவசாயிகள் உள்ளனர். பிரதம மந்திரி கௌரவ நிதியுதவி திட்டத்தின் கீழ் 69,026 விவசாயிகள் பயன் பெற்று வருகின்றனர். இதில் விவசாயிகள் பதிவேடு திட்டத்தில் இதுவரை பிரதம மந்திரி கௌரவ நிதியுதவி திட்டத்தின் கீழ் 51,365 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். இதில் பிரதம மந்திரி கௌரவ நிதியுதவி திட்டத்தின் கீழ் பயன் பெறும் 17,661 விவசாயிகள் பதிவு செய்யவில்லை. இம்மாவட்டத்தில் மொத்தம் இதுவரை 84,390 விவசாயிகள் மட்டுமே பதிவு செய்துள்ளார்கள்.

எனவே, இம்மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் உடனடியாக தங்கள் நில உடைமை விவரங்களை பதிவேற்றம் செய்து, விவசாயிகளுக்கான தனித்துவமான அடையாள எண் பெற வேண்டியது அவசியமாக உள்ளது. இவ்வாறு பதிவு செய்து பெறப் படும் தனித்துவ விவசாயி அடையாள எண் மூலம் இனிவரும் காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பயன்களை பெற முடியும். எனவே, விவசாயிகள் தங்களுடைய கணினி சிட்டா, ஆதார் எண், கைபேசி ஆகியவற்றுடன் அருகில் உள்ள பொது சேவை மையத்தில் வரும் 15.11.25ம் தேதிக்குள் இலவசமாக பதிவு செய்து கொள்ள லாம். மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் பொ.இரத்தினசாமி, தெரிவித்துள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், நவ.6

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் பயிற்சி 11.11.25 மற்றும் 12.11.25 ஆகிய நாட்களில் நடைபெறும்.

சிறுதானிய வகைகளான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை, தினை, பனிவரகு போன்றவை மக்களால் உணவில் ஓரளவு சேர்த்துக் கொள்ளப்படுகிறது. நகர்ப்புறங்களில் கேழ்வரகு மட்டும் பயன்பாட்டில் உள்ளது. சிறுதானிய வகைகளில் உள்ள சத்துக் களையும் அவற்றை உபயோகித்து தயாரிக்கப்படும்.

கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

அவையாவன

- பாரம்பரிய உணவுகள்
- பிழிதல்
- அடுமனைப் பொருட்கள்
- உடனடி தயார் நிலை உணவுகள்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500/- + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

பயிற்சி நடைபெறும் இடம் : அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண். 7, மருதமலை சாலை வழி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம் புத்தூரில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மக்காச்சோள பண்ணைப்பள்ளி விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது




திண்டுக்கல், நவ.6

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் மாங்கரை கிராமத்தில் மக்காச்சோள பண்ணைப் பள்ளி விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சி ரெட்டியார்சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி அறிவுரையின் படி காந்தி கிராம வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் ரெங்கநாதன் மண் மாதிரி எடுத்தல் மண் பரிசோதனை செய்வதின் முக்கியத்துவம் மற்றும் பரிசோதனை முடிவு படி உரமிடுவதன் மூலம் உர அளவை குறைத்து உற்பத்தியை பெருக்கலாம் என கூறினார்.

மேலும் மக்காச்சோள பயிர்களில் பூச்சி நோய் தாக்குதல் மற்றும் மேலாண்மை தொழில்நுட்பம் பற்றி கூறினார். மற்றும் விதை கடினப்படுத்துதல் நீர் சேமிப்பு மற்றும் நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய தலைவர் தேவராஜ், பண்ணைபள்ளி மண்பரிசோதனை நடவு முறை களை எடுத்தல் உரமிடுதல் என பயிற்சி வகுப்புகள் நடைபெறும் என கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் செந்தில் பண்ணைப்பள்ளி திடலுக்கு விவசாயிகளை அழைத்து சென்று மக்காச்சோள பயிர் பற்றி கூறி படைப்புழு தாக்குதல் சரி செய்ய மெட்டாரிசியம் ஸ்பிரே செய்ய கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் சேகர் பயிர் காப்பீடு செய்து பயன் பெறுமாறு கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

# பி.எம்.கிசான் நிதி தொடர்ந்து பெறுவதற்கு நில உடைமை பதிவு கட்டாயம்

## வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, நவ.6

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள், பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (PMKISAN) தொடர்ந்து தவணைத் தொகைகளை பெறுவதற்கு தங்கள் நில விவரங்களை வேளாண் அடுக்கக



திட்டத்தில் பதிவு செய்வது கட்டாயமாகும். எனவே, விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வேளாண் துறை சார்ந்த அலுவலர் களைத் தொடர்பு கொண்டு கட்டணமின்றி பதிவு செய்து பயன்பெறுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி அழைப்பு விடுத்துள்ளார்கள்.


இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், விவசாயிகள் அரசின் பல்வேறு திட்டப் பலன்களைப் பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள், பயிர் சாகுபடி அறிக்கை போன்ற தொடர்புடைய ஆவணங்களை ஒவ்வொரு முறையும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் வகையிலும் அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெற ஏதுவாகவும் அனைத்து விவரங்களையும் மின்னணு முறையில் சேகரித்திட தமிழ்நாட்டில் வேளாண் அடுக்குத் திட்டம் (AgriStack) செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்சமயம் புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் 1,19,606 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். மேலும், அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் பதிவு செய்திட அனைத்து கிராமங் களிலும் பதிவுகள் மேற்கொள்ளும் பணி நடைபெற்று வருகிறது.

எனவே, விவசாயிகள் தங்களது ஆதார் எண், கைபேசி எண், நில உடைமை விவரங்கள் ஆகியவற்றை இணைத்திட தங்கள் பகுதி வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை அலுவலர்களை அணுகி பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விவசாயிகளின் நில உடைமை விவரங்கள் இணைக்கப்பட்ட பின்னர் அனைத்து விவரங்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட ஆதார் எண் போன்ற தனித்துவமான தேசிய அளவிலான அடையாள எண் ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்படும். 2025-26ஆம் நிதி ஆண்டு முதல் பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (PMKISAN)-ல் தொடர்ந்து தவணைத் தொகைகளை பெறுவதற்கு விவசாயிகளின் நில உடைமைகளை பதிவு செய்து அடையாள எண் பெறுவது கட்டாயம் ஆகும்.

எனவே, விவசாயிகள் தங்களது பகுதி வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலர்கள் அல்லது அருகில் உள்ள பொது சேவை மையங்களை நேரடியாக அணுகி தங்கள் நில உடைமை விவரங்கள், ஆதார், கைபேசி எண் ஆகிய விவரங்களை அளித்து எவ்வித கட்டணமுமின்றி விரைந்து பதிவு செய்து பயன்பெறுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்கள்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# உளுந்து விதைப்பதற்கு முன் விதைப்பரிசோதனை அவசியம்!

பெரம்பலூர், நவ.6

பெரம்பலூர் மாவட்டத்தில் மார்கழி–தை பட்டத்தில் விவசாயிகளால் உளுந்து சாகுபடி செய்யப் பட்டு வருகிறது.



விவசாயிகள் இம்மாவட்டத்தில், விபிஎன்–8, விபிஎன்–9, விபிஎன்–10, விபிஎன்–11, டி–9, கோ–6, ஏடிடீ–5 மற்றும் நாட்டு இரகங்களை பயிரிட்டு வருகின்றனர். உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகள் தமிழக விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று துறையினால் சான்றளிக்கப்பட்டுசான்று அட்டை பொருத்திய விதைகளைப் பயன்படுத்த வேண்டும்.

விவசாயிகள் சேமித்து வைத்துள்ள உளுந்து விதைகள் அல்லது விற்பனையாளர்களிடமிருந்து பெறப்பட்ட உளுந்து விதைகளை பரிசோதனை செய்த பின்னர் விதைப்புக்கு பயன் படுத்துவது உத்தமம். ஆகையால் விதைப்பரிசோதனை நிலை யத்தில் இவ்விதைகளின் முளைப்புத்திறன், ஈரப்பதம், புறத் தூய்மை, பிறரக கலவன் மற்றும் பிற பயிர்கள் போன்ற காரணிகள் பரிசோதனை செய்யப்பட்டு முடிவுகள் அறிவிக்கப் படும்.

உளுந்து விதையின் குறைந்தபட்ச முளைப்புத்திறன் 75 சதவீதமாக இருக்க வேண்டும். உளுந்து விதைகளை பரிசோதனை செய்து முளைப்புத்திறனை இயல்பானது, இயல்பற்றது, கடின விதைகள், உயிரற்றது மற்றும் முளைவிடாத உயிருள்ள விதைகள் என்ற வகையில் கணக்கிடப்படுகிறது. முன்கூட்டியே அறிவதால் விதைகளின் அளவை (சீட்ரேட்) முளைப்புத்திறனுக்கு ஏற்றவாறு சரியாக கணக்கிட்டு பயன் படுத்தலாம். மேலும், பயிர்களின் எண்ணிக்கையை சரியாக பராமரிக்க முடியும். உளுந்து விதையின் அதிகபட்ச ஈரப்பதம் 9 சதவீதமாக இருக்க வேண்டும்.

இப்பருவமழைக் காலங்களில் சேமிக்கப்பட்ட உளுந்து விதைகளின் ஈரப்பதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் பூச்சி மற்றும் பூஞ்சை பாதிப்புக்கு உள்ளாகி முளைப்புத்திறன் குறைய அதிக வாய்ப்புள்ளது.

உளுந்து விதையின் புறத்தூய்மை 98 சதவீதமாக இருக்க வேண்டும். புறத்தூய்மை பரிசோதனையில் பிற விதை மற்றும் களை விதை, உயிர்பற்ற பொருட்கள் கண்டறியப்படுவதால் விதையின் இனத்தூய்மை மற்றும் புறத்தூய்மை காப்பாற்றப்படுகிறது.

உளுந்து விதைப்பரிசோதனையில் பிறரக கலவன்கள் ஏதேனும் இருப்பின் அதன் முடிவுகளையும் தெரிந்து கொள்ளலாம்.

ஆதார நிலை உளுந்து விதைகளில் (1 கிலோ) அனுமதிக்கப்படும் பிறரக கலவன் எண்ணக்கை 10 மற்றும் சான்று நிலை உளுந்து விதைகளில் (1 கிலோ) அனுமதிப்படும் பிறரக கலவன் எண்ணிக்கை 20 ஆகும்.

விதைப்பரிசோதனை நிலையத்தில் ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80/- பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் பிற இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச்சீட்டுடன், உளுந்து 100 கிராம் அனுப்பி விதைகளை பரிசோதனை செய்து பயன் பெறலாம் என தெரிவித்துள்ளனர்.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை நிலையமானது பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் அருகில், மாவட்ட மைய நூலகம் மேல்புறம், துறைமங்கலம், பெரம்பலூர் - 621 220 என்ற முகவரியில் செயல்படுகிறது.

இதனை பெரம்பலூர் விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் ரெ.ஆஷாலதா, ரா.அம்பிகா ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ளனர்.



# கிராம வேளாண் முன்னேற்ற குழு பயிற்சி




சேலம், நவ.6

சேலம் மாவட்டம், அயோத்தியா பட்டிணம் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் கிராம வேளாண் முன்னேற்ற குழு பயிற்சி தாச நாயக்கன்பட்டி கூட்டாத்துப்பட்டி மற்றும் வெள்ளாளகுண்டம் கிராமங் களில் நடைபெற்றது.

அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் தமிழ்ச்செல்வி விவசாயிகளை வரவேற்று அட்மா திட்டம் குறித்து விளக்கினார். இதில் வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா பங்கேற்று அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள விதை இருப்புகள், மற்றும் மானியங்கள் குறித்து விளக்கம் அளித்தார்.

வேளாண் வணிக உதவி வேளாண்மை அலுவலர் கவி பாரதி பங்கேற்று வேளாண் வணிகத்தில் சேமிப்பு கிடங்கில் விதைகள் இருப்பு வைத்தல் மற்றும் அறுவடைக்குப் பின் விதைகள் ஈரம் இல்லாமல் உலர்த்தவும், அறுவடைக்கு பின் செய்யும் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் குறித்தும் விளக்கம் அளித்தார்.

அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வி விவசாயிகள் மண்மாதிரி எடுத்தல், மண் பரிசோதனை, தரமான சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துதல், உயிர் உர விதை நேர்த்தி செய்தல், பஞ்சகாவியம் தயாரித்தல், இயற்கை உரங்களை பயன்படுத்தி நிலத்தின் தன்மையை பாதுகாக்கும் படி அறிவுறுத்தினார்.

உதவி தோட்டக்கலை அலுவலர் விஜயகுமார், கலந்து கொண்டு தென்னை மரத்தில் ரூகோஸ் வெள்ளை ஈ பூச்சி தாக்குதலுக்கு கட்டுப்பாடு மற்றும் காண்டாமிருக வண்டு கட்டுப்பாடு, இயற்கை உரங்களை பயன்படுத்துதல், மீன் அமிலம் பஞ்சகாவியா தயாரித்தல் குறித்து தொழில்நுட்பங்கள் எடுத்துரைத்தார். 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன் பெற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்களான செல்வி மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியோர் செய்திருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R V P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வருசமெல்லாம் வருமானம் தரும் கோழிக் கொண்டை பூ சாகுபடி!



தற்போது அனைத்து மாதங்களும் விழாக்க ாலங்கள் தான். இன்னும் சொல்லப்போனால் பூக்களின் விலை எழுச்சி எப்போதும் இருக்கும் திருமண காலங்களில் மட்டுமல்ல. எல்லா காலங்களில், குறிப்பாக ரோஜா, மல்லிகை, பிச்சி, கனகாம்பர பூக்களுக்கு மேலும் அழகுற செய்ய பயன்படுத்தும் உதிரி பூக்கள் வரிசையில் நான் இன்று காணப்போகும் கோழி கொண்டை பூ இதுவாசமில்லாவிட்டால் மற்ற மலர்களின் அழகை மெருகூட்டிட உதவும். அத்தகைய பூக்களின் சாகுபடி தொழில்நுட்ப ங்களை இனி பார்ப்போம்.

### கோழி கொண்டை பூ (COCKS COMB)

இதனுடைய தாவரவியல் பெயர் செலோசியா கீரிஸ் டேட்டா. இதில் சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு ரோஜா நிறங்களிலும் பூக்கின்றன. இது ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, இந்தியா மற்றும் ஆசியாவின் சில பகுதிகளில் பயிரிடப்படுகிறது.

### பருவம்

வருடம் முழுவதும் சாகுபடி செய்யலாம்.

### நாற்றாங்கால் தயாரிப்பு

ஒரு ஏக்கர் பூச்செடி நடுவதற்கு 4 சென்ட் மேட்டு பாத்தி நாற்றாங்கால் அமைக்க வேண்டும். நிலத்தை நன்றாக உழுது மக்கிய தொழு உரத்தை போட்டு தயாராக வைக்க வேண்டும்.

### விதை அளவு

400 கிராம்

மேட்டுபாத்தியில் விதைக்கப்பட்ட கோழி கொண்டை விதைகள் 7-14 நாட்களில் முளைக்க தொடங்கும். எனவே விதைகள் முளைக்கும் வரை மூடாக்கு போட்டு பூவாளி கொண்டு தண்ணீரை தெளிக்க வேண்டும். நாற்றுகளை 30வது நாளில் பிடுங்கி நடவு செய்ய வேண்டும்.

### இடைவெளி

30 X 30 செ.மீ அல்லது 45 X 45 செ.மீ இடைவெளியில் நடவு செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 40.000 SEEDLINGS தேவைப்படும்.

### உர மேலாண்மை

நடவு செய்த 15-20 நாட்களில் நடவு வயலில் நீரில் கரையக்கூடிய 19:19:19 உரத்தை கரைத்து பாசனத்துடன் கலந்து விடலாம்.

இரண்டாம் களையெடுக்கப்பட்ட பின்னாளில் பொட்டாஷ் உரத்தை இடலாம். பயிர் பாதுகாப்பு அவ்வளவாக தேவைபடாது சாறு உறிஞ்சும் பூச்சிகள் தாக்குதல் தென்பட்டால் ரோகார் 3 மி.லி/ஒரு லிட்டர் தேவைப்படும்.

### பூக்கள் எப்போது உருவாகும்?

நட்ட 40வது நாளில் மொட்டு விட்டு பூ வளர ஆரம்பிக்கும் 65-75 நாளில் பூக்களை அறுவடை செய்யலாம். குறைந்த பட்சமாக ஒரு செடியிலிருந்து 4-5 முறை அறுவடை செய்யலாம்.

கோழிக்கொண்டை சாகுபடி செய்வது மிகவும் எளிதாகும். ஆனால் வருமானமோ கூடுதலாகும் மற்ற பயிர் சாகுபடி விட நஷ்டம் இல்லாமல் வருமானத்தை தரக்கூடிய தான் கோழி கொண்டை பூ. (KOLI KONDAI POO) என்பதில் மாற்று கருத்து உண்டா? இல்லை என்றுதான் பதில் வரும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# நெல் பயிரில் வெள்ள பாதிப்பின் போது கடைபிடிக்க வேண்டிய மேலாண்மை முறைகள்

**நாற்று / நாற்றங்கால் பருவத்தின் போது**

● கூடுதல் நீரை வடிகட்ட வேண்டும்.

● மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைக்க வேண்டும்.

● நேரடி விதைப்பிற்கு முளைக்கட்டிய விதைகளை விதைக்க வேண்டும்.

● குறுகிய கால இரகங்களை விதைப்பு செய்ய வேண்டும்.

**வளர்ச்சி பருவத்தின் போது**

● கூடுதல் நீரை வடிகட்ட வேண்டும்.

● ஒரு சதவிகித யூரியா கரைசல் (ஏக்கருக்கு 2 கிலோ யூரியா + 1 கிலோ சிங்சல்பேட் + 200 லிட்டர் தண்ணீர்) தெளிக்க வேண்டும்.

● நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனாஸ் நுண்ணுயிரினை 20 கிலோ மணல் (அ) தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும்.

● பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங் கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

**பூக்கும் மற்றும் பால்பிடிக்கும் பருவம்**

● கூடுதல் நீரை வடிகட்ட வேண்டும்.

● இரண்டு சதவிகித டிஏபி கரைசல் தெளிக்க வேண்டும்.

● ஏக்கருக்கு 50 கிலோ அம்மோனியம் சல்பேட் (அல்லது) 22 கிலோ யூரியாவுடன் 18 கிலோ பொட்டாஷ் கலந்து மேலுரமாக இடவேண்டும்.

பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங் கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டுக் கொண்டு உள்ளார்.

# இரசாயண உரப் பயன்பாட்டினை ஒருங்கிணைந்த உர மேலாண்மை மூலம் குறைப்பது குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி

மதுரை, நவ.6

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் 2025-26ம் ஆண்டு நிதியில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த






வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படும் லெ.கொட்டாணி பட்டி ஊராட்சியில் இராசாயண உரப் பயன்பாட்டினை ஒருங்கிணைந்த உர மேலாண்மை மூலம் குறைப்பது குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 6.11.25 அன்று நடைபெற்றது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ம.ஹேமலதா வரவேற்புரை ஆற்றினார். மா.விமலா, ஒருங்கிணைப்பாளர் / வேளாண்மை உதவி இயக்குநர், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் பசுந்தாள் உரமான தக்கைப்பூண்டு விதையினை விதைத்து உழவு செய்வதனால் மண்ணின் வளம் பாதுகாக்கப்படுகிறது. உழவர் செயலியில் தமிழ் மண் வளம் இணைய தளத்தில் விவசாயிகள் தங்களது நிலத்திற்குரிய மண்ணின் ஊட்டச்சத்து நிலையினை சுய விவரங்களை பதிவு செய்து அறிந்துகொள்ளலாம் என்று விளக்கி கூறினார்.

வேளாண்மை அலுவலர் (ஓய்வு) கு.குணசேகரன், ஒரு விவசாயி தன்னுடைய நிலத்திலேயே ஆடாதோடா, நொச்சி, துளசி, ஆடு தீண்டா பாலை, பிரண்டை, ஆமணக்கு, எருக்கிலை, ஊமத்தம், சோற்றுக்கற்றாழை, புங்கன், வேம்பு போன்ற செடி மற்றும் மரங்களை நட்டு பராமரிப்பதன் மூலம் பூச்சி, நோய் களில் இருந்து பயிரை பாதுகாத்து நஞ்சில்லா விவசாயம் மேற்கொள்ளலாம் என்றார். மேலும் பஞ்சகாவ்யம், மீன் அமிலம் மற்றும் பூச்சி விரட்டி தயாரிக்கும் செயல் விளக்கங் களை செய்து காண்பித்தார்.

வேளாண்மை அலுவலர் சு.சரவணக்குமார், கலைஞரின் திட்டம் குறித்தும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இடு பொருட்களை விவசாயிகள் வாங்கி பயன்பெறுமாறும், நுண்ணூட்ட உரக்கலவையின் பயன்கள் மற்றும் உபயோகம் மற்றும் பயிர்க்காப்பீடு செய்வதன் அவசியம் குறித்தும் மற்றும் வேளாண்மைத்துறையின் மானிய திட்டங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

நடமாடும் மண்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் இரா.ஷோபனா, மண் பரிசோதனை செய்வதின் அவசியம் குறித்தும் மண் பரிசோதனை ஆய்வு முடிவின்படி உரமிடுதல் குறித்தும் விளக்கி கூறினார். நடமாடும் மண்பரிசோதனை ஆய்வகத்தில் மண் மாதிரிகள் ஆய்வு செய்வதை செயல் விளக்கம் செய்து காண்பித்தார். விதை நேர்த்தி செய்வதன் அவசியம் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்தும் அளவுக்கு அதிகமான இரசாயன உரங்களை மண்ணில் தொடர்ந்து இடுவதன் மூலம் மண்ணின் கார அமில நிலை மாறி மண்ணின் உற்பத்தித்திறன் குறைந்து விடுகிறது என்றும் மண்வளத்தை மேம்படுத்த இயற்கை உரங்களை பயன்படுத்தவும் உதவி வேளாண்மை அலுவலர் இரா.ராதா கிருஷ்ணன், தொழில்நுட்ப உரை வழங்கினார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பா.மாரிமுத்து, கா.ஜெகன் பாண்டி, இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் நானோ டி.ஏ.பி விதை நேர்த்தி விழிப்புணர்வு முகாம்



மயிலாடுதுறை, நவ.6

மயிலாடுதுறை மாவட்டம், ஆக்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் இப்கோ நிறுவனத்தின் சார்பில் விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் நானோ டி.ஏ.பி விதை நேர்த்தி விழிப்புணர்வு முகாம் இப்கோ கள அதிகாரி பரஞ்சோதிதலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், பரஞ்சோதி, நானோ யூரியா, நானோ காப்பர், நானோ ஜிங்க் மற்றும் சாகரிக்கா திரவ உரங்களின் நன்மைகள் மற்றும் பயன்படுத்தும் முறை குறித்து விளக்கினார். மேலும் இந்நிகழ்ச்சியின் முக்கிய கருத்தான நானோ டி.ஏ.பி விதை நேர்த்தியின் முக்கியத்துவம், பயன்படுத்தும் முறை, நானோ தொழில்நுட்பத்தின் நன்மைகள் மற்றும் அவை குருணை உரங்களைவிட அதிக வளரச்சி மற்றும் மகசூலை தரக்கூடியது என்றும் விவசாயிகளுக்கு விரிவாக விளக்கப்பட்டது.

மேலும் ஒரு கிலோ விதைக்கு 5 மில்லி லிட்டர் நானோ டி.ஏ.பி. அளவில் விதை நேர்த்தி செய்யலாம் அல்லது ஒரு லிட்டர் நீருக்கு 5 மில்லி லிட்டர் நானோ டி.ஏ.பி கலந்து நாற்று, கரணை, கிழங்கு போன்றவற்றில் நேர்த்தி செய்யலாம். நேர்த்தி செய்த விதைகளை நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் நானோ டி.ஏ.பி. பயன்பாட்டினால் விதை முளைத்தல் விகிதம் அதிகரிக்கும், வேர் வளர்ச்சி சிறப்பாகும், இலைகளில் குளோரோபில் உற்பத்தி மேம்படும், தாவர நோய் எதிர்ப்பு சக்தி உயரும், விளைச்சல் மற்றும் வருமானம் அதிகரிக்கும் என்றார்.

இதனை தொடர்ந்து, பரஞ்சோதியால் நெற்பயிரில் இப்கோ நானோ டி.ஏ.பி. திரவ உரத்தை கொண்டு நெற்பயிரில் நாற்று நேர்த்தி செயல்முறை விளக்கத்திடல் அளிக்கப்பட்டது.

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

DOCTOR OF ASTROLOGY

**பா.இளங்கோவன்**

M.Sc., MBA, D.Astro, Phd.,

ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும் தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# எள்ளில் பச்சைப்பூ நோய் அறிகுறி மற்றும் மேலாண்மை!

இந்நோயை உண்டாக்கக் கூடிய நுண்ணுயிரி பாக்டீரியா உடன் தொடர்புடைய காண்டிட்டஸ் பைட்டோபிளாஸ்மா (Candidatus Phytoplasma) என்று அழைக்கப்படுகிறது.

**இந்நோயின் அறிகுறிகள்**

● இந்நோய்ப் பாதிக்கப்பட்ட செடியின் பூக்கள் பச்சை இலைகளாக மாறி சிறிதாகக் காணப்படும்.

● இலைகள் சிறுத்தும், பூக்கள் உருமாற்றம் அடைந்தும், மலட்டுத்தன்மை உடைய பூக்களாகவும் காணப்படும்.

● நோய் பாதிக்கப்பட்ட மகரந்தம் அனைத்தும் பச்சையாகக் காணப்படும்.

● கணு மற்றும் கணுவிடை பகுதியின் அளவுகள் குறைந்து நோய்ப் பாதிக்கப்பட்ட செடி ஒரு புதர் (bushy) போன்று தோற்றமளிக்கும்.

● எள் செடியில் வெள்ளை நிறப் பூக்கள் பச்சை நிறமாக மாறி காணப்படும்.

● எள் செடியின் பூ மொட்டு உருமாற்றமடைந்து வீங்கி காணப்படும்.

● நோய் பாதிக்கப்பட்ட செடியில் என் விதைகள் முதிர்ச்சி அடைவதற்கு முன்னரே காய்களில் விரிசல் உண்டாகும்.

● இந்நோய் பூ பூக்கும் முன்னரே செடியைப் பாதித்தால் அனைத்துப் பூக்களுமே இலைகளாக உருமாற்றமடைந்து காட்சியளிக்கும்.

● ஒரு சில அரிதான தருணங்களில் நோய்ப் பாதிக்கப்பட்ட செடிகளில் உள்ள விதைகள் அறுவடைக்கு முன்னரே முளைக்க ஆரம்பித்து விடும்.



### நோயைப் பரப்பக்கூடிய பூச்சிகள்

● இந்நோயைத் தத்துப் பூச்சிகள் (Orosius albicinctus) அதிக அளவில் பரப்பும். இந்தப் பூச்சிகள் இலைகளின் பச்சையத்தை உறிஞ்சி இலைகளை முழுவதுமாக பழுப்பு நிறமாக மாற்றி விடும். இலைகளின் நுனிப்பகுதி சுருண்டு காணப்படும்.

### ஒருங்கிணைந்த நோய்க் கட்டுப்பாடு

● வேப்ப எண்ணெய் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 30 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிப்பதன் மூலம் நோயைப் பரப்பக்கூடிய பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும்.

● மீத்தைல் டெமட்டான் / குயினால்பாஸ் என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிப்பதன் மூலம் இந்நோயைப் பரப்பக்கூடிய பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.




● நோய் பாதிக்கப்பட்ட செடிகள் வயலில் தென்பட்டால் அவற்றை முழுவதுமாக அகற்றி அழித்து விடுவது நல்லது.

● எள் செடியுடன் ஊடுபயிராகத் துவரையை (6:1 என்ற விகிதத்தில்) பயிரிடுவதன் மூலம் இந்நோயைக் கட்டுப் படுத்தலாம்.

● டெட்ரா சைக்கிளின் என்ற மருந்தை 10 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் என்ற அளவில் கலந்து தெளிப்பதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால், இந்த மருந்து தெளிக்கப்பட்ட இடங்களில் 25 நாட்களுக்குப் பிறகு இந்நோயின் அறிகுறிகள் மறுபடியும் தோன்றும். அவ்வாறு தோன்றும் பட்சத்தில் மறுபடியும் இந்த மருந்தை மாதத்திற்கு ஒரு முறை தெளிக்கலாம் என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா கூறினார்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# தேனீ மற்றும் பயிர் மகரந்தச் சேர்க்கை - ஒரு பார்வை

இயற்கையில் சுற்றுச்சூழல் அமைப்பை ஒழுங்குபடுத்தும் சேவையாக மகரந்தச்சேர்க்கை முக்கிய பங்கு வகிக்கிறது. பூச்சி மகரந்தச் சேர்க்கையாளர்களில், தனித்த மற்றும் சமூகத் தேனீக்கள் நிர்வகிக்கப்பட்ட மற்றும் இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளில் பெரும்பாலான மகரந்தச் சேர்க்கையை வழங்கு





கின்றன. கோதுமை, சோளம் மற்றும் அரிசி உள்ளிட்ட உலகின் பெரும்பாலான முக்கிய உணவுகள் பூச்சி மகரந்தச் சேர்க்கை இல்லாமல் இனப் பெருக்கம் செய்கின்றன. இந்த பயிர்கள் உலகளாவிய உணவு உற்பத்தியில் 65% ஆகும், இன்னும் 35% வரை மகரந்தச் சேர்க்கை செய்யும் விலங்கு களைச் சார்ந்தே உள்ளன.

நவீன விவசாயத்தின் பாரிய அளவு மற்றும் ஒருமைப்பாடு காரணமாக, மகரந்தச் சேர்க்கை தேவைப்படும் பெரும்பாலான பயிர்கள் நிர்வகிக்கப்பட்ட மகரந்தச் சேர்க்கையாளர்களைச் சார்ந்துள்ளன, குறிப்பாக நிர்வகிக்கப்பட்ட தேனீக்களைச் சார்ந்துள்ளது. மகரந்தச் சேர்க்கை என்பது உணவுப் பாதுகாப்பிற்கு முக்கியமான ஒரு சுற்றுச்சூழல் அமைப்பு சேவை-யாகும். பல பழங்கள் மற்றும் காய்கறி பயிர்களுக்கு மகரந்தச் சேர்க்கைகள் அவசியம். விவசாயத்தில், குறிப்பாக மகரந்தம் குறைவாக உள்ள பயிர்களில், மகரந்தச் சேர்க்கை சேவைகளை ஊக்குவிப்பது என்பது விலையுயர்ந்த விவசாய உள்ளீடுகளான பூச்சிக்கொல்லிகள் அல்லது களைக்கொல்லிகளை நாடாமல் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான ஒரு வழியாகும்.

**இயற்கை மற்றும் விவசாய சுற்றுச்சூழல் அமைப்புகளில் மகரந்தச் சேர்க்கையாளர்கள்**

மகரந்தச் சேர்க்கையாளர்-தாவர தொடர்புகள் கிட்டத்தட்ட 4,00,000 இனங்களை உள்ளடக்கியதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தாவரத்திற்கும் மகரந்தச் சேர்க்கையாளருக்கும் இடையிலான உறவின் துல்லியமான தன்மை பெரிதும் வேறுபடுகிறது. சில விலங்குகள் தேன் அல்லது மகரந்தத்திற்காக பூக்களைப் பார்வையிட்டாலும், அனைத்து மலர் பார்வையாளர்களும் மகரந்தச் சேர்க்கையை ஏற்படுத்துவதில்லை. பயனுள்ள மகரந்தச் சேர்க்கையாளர்கள் பெரும்பாலும் நடத்தை மற்றும் உடற்கூறியல் பண்புகளைக் கொண்டுள்ளனர். அவை மகரந்த விநியோகத்தின் செயல்திறனையும் துல்லியத்தையும் பெரிதும் அதிகரிக்கின்றன. பொதுவாக, மகரந்தச் சேர்க்கை என்பது பரஸ்பர நன்மை பயக்கும் தொடர்பு, மகரந்தச் சேர்க்கை செய்யும் விலங்குகள் வருகை மற்றும் மகரந்த விநியோகத்திற்கு சில வகையான ஊட்டச்சத்து "வெகுமதியை" பெறுகின்றன. மகரந்தம் ஒரு வெகுமதியாக இருக்கலாம்,

பெரும்பாலான லார்வா தேனீக்களுக்கு முதன்மை உணவு வளமாகவும், சில ஈக்கள், பட்டாம்பூச்சிகள், பறவைகள் மற்றும் வௌவால்களுக்கு புரதத்தின் முக்கிய ஆதாரமாகவும் செயல் படுகிறது. பிற தாவரங்கள் வருகை மற்றும் மகரந்த விநியோ கத்தைத் தூண்டுவதற்கு தேன், எண்ணெய்கள், பிசின்கள், வாசனை திரவியங்கள், பெரோமோன் முன்னோடிகள் மற்றும் பிற வளங்களை வழங்குகின்றன.

## மகரந்தச் சேர்க்கையாளர்களாக தேனீக்கள்

தேனீக்களை விட வேறு எந்த பூச்சிக் குழுவும் மனிதர்களுக்கு அதிக நன்மை பயக்கவில்லை. உலகின் மூன்றில் ஒரு பங்கு பயிர்களுக்கு விதைகள் மற்றும் பழங்களை உருவாக்க மகரந்தச் சேர்க்கை தேவைப்படுகிறது. மேலும் பெரும்பாலான இறைச்சி மற்றும் பால் தொழில்கள் தீவன மகரந்தச் சேர்க்கைக்கு தேனீக்களை நம்பியுள்ளன.

தேனீ மகரந்தச் சேர்க்கையை நம்பியுள்ள பயிர்களில் ஆப்பிள், சிட்ரஸ், தக்காளி, முலாம்பழம், ஸ்ட்ராபெரி, பாதாமி, பீச், மாம்பழம், திராட்சை, கேரட், உருளைக்கிழங்கு, வெங்காயம், பூசணி, பீன்ஸ், வெள்ளரி, சூரியகாந்தி, பல்வேறு கொட்டைகள், அல்ஃபல்ஃபா போன்றவை அடங்கும்.

அறுவடைக்கு மகரந்தச் சேர்க்கை தேவையில்லாத பயிர்கள், எடுத்துக்காட்டாக நார் அல்லது மரத்தை உற்பத்தி செய்யும் பயிர்கள் கூட, அடுத்த தலைமுறைகளை உற்பத்தி செய்ய மகரந்தச் சேர்க்கை தேவைப்படுகிறது. மேலும் விதைகளை உற்பத்தி செய்ய மகரந்தச் சேர்க்கை தேவையில்லாத பருத்தி போன்ற பயிர்கள் மகரந்தச் சேர்க்கைகள் கிடைக்கும்போது அதிக மகசூலை அளிக்கின்றன.

தேனீக்களிடமிருந்து தேன் மற்றும் தேன் மெழுகு வடிவில் பெறப்படும் நேரடி நன்மைகளைத் தவிர, அவற்றின் மகரந்தச் சேர்க்கை சேவைகள் காரணமாக சில பண்ணைப் பயிர்கள் மற்றும் வனப் பொருட்களின் அதிகரித்த மகசூல் மூலம் அடையப்படும் மறைமுக நன்மைகள் மகத்தானவை.

## பயிர் மகரந்தச் சேர்க்கைக்கு தேனீக்களை அதிகரித்தல்

ஒரு பயிரின் மகரந்தச் சேர்க்கை சார்பு, பயிர்கள் மற்றும் பயிர் வகைகள் உட்பட, இனங்களுக்கு இடையே வேறுபடுகிறது. சில தாவரங்கள் குறுக்கு மகரந்தச் சேர்க்கை செய்யப்பட வேண்டும்,

மற்றவற்றுக்கு மகரந்தச் சேர்க்கை தேவையில்லை. ஆனால் மகரந்தச் சேர்க்கை செய்யப்பட்டால் சிறந்த பழங்களையும் விதைகளையும் உற்பத்தி செய்கின்றன. மேலும் அவற்றில் பல கண்டிப்பாக சுய மகரந்தச் சேர்க்கை செய்யப்படுகின்றன.

ஒரே பயிரின் பயனுள்ள மகரந்தச் சேர்க்கைகள் ஒரு தளத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாறுபடலாம். மகரந்தச் சேர்க்கை சார்பு மற்றும் வகைகள் குறித்த குறிப்பிட்ட அறிவு விவசாயம் மற்றும் பல்லுயிர் (வேளாண்-பல்லுயிர் உட்பட) பாதுகாப்பிற்கு முக்கியமானது.

தேனீ மகரந்தச் சேர்க்கை தொடர்பாக ஒரு பழம், காய்கறி அல்லது விதை உற்பத்தியாளர் அடிக்கடி செய்யும் ஒரு தவறு என்னவென்றால், "அண்டை வீட்டு தேனீக்கள்" தனது பயிருக்கு போதுமான மகரந்தச் சேர்க்கையை வழங்கும் என்று கருதுவது. ஒரு கூட்டிலிருந்து வரும் தேனீக்கள் கூட்டத்திலிருந்து 2-3 மைல்கள் பறக்கும் என்றாலும், அதிகபட்ச செயல்திறன் மற்றும் அதிகபட்ச மகரந்தச் சேர்க்கையின் ஆரம் கூட்டத்திலிருந்து 200-300 கெஜம் மட்டுமே. தேனீயின் கவனத்திற்காகப் போட்டியிடும் பல பூக்கள் உள்ளன. சில மகரந்தச் சேர்க்கை தேவைப்படும் பயிரை விட வேலை செய்வதற்கு மிகவும் "லாபகரமானதாகவோ" இருக்கலாம். அழகற்ற பயிருக்கு தீவனம் தேட தேனீக்கள் அதிக தூரம் பறக்காது.

தேனீக்களை நேரடியாக ஒரு வயலுக்கு நகர்த்துவதன் மூலம், ஒரு விவசாயி அந்தப் பகுதியில் பறக்கும் செயல்பாட்டை அதிகரிக்க முடியும். இருப்பினும், ஒருவர் பல பரிசீலனைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் ஒருவர் பின்பற்ற வேண்டிய நடைமுறையும் உள்ளது.

- **தேனீ கூட்டங்களை வைக்கும் நேரம் :** 5-10% பூக்கும் காலம் தொடங்கியவுடன், தேனீ கூட்டங்கள் பயிரில் வைக்கப்படும்.

- **தேனீ கூட்டங்கள் வைக்கப்படும் இடம் :** தேனீக்களின் கூட்டங்கள் இலக்கு பயிர்களுக்கு அருகில் வைக்கப்படுகின்றன, இதனால் அவை சுறுசுறுப்பாக நகரவும், குறுக்கு மகரந்தச் சேர்க்கையை ஏற்படுத்தவும், பயணத்தில் குறைந்த ஆற்றல் பயன்படுத்தப்படுகிறது.

- **தேனீ கூட்டங்களை வைக்கும் முறை :** தேனீ வளர்ப்பவரின் வசதிக்கேற்ப, கூட்டங்கள் குழுக்களாகவோ அல்லது சிதறடிக் கவோ, மேலும் இலக்கு பயிரை சுற்றியோ அல்லது இடையில் சிதறடிக்கவோ வைக்கப்படுகின்றன.

● **கூட்ட ஏற்பாடு :** கூட்டத்திற்கு அருகில் இருக்கும் போது தேனீக்கள் மிகவும் திறமையானவை. எனவே, உணவு தேடுபவர்களின் மிகவும் திறமையான விநியோகத்தை அடைய, கூட்டங்களை 300-500 கெஜ இடைவெளியில் விநியோகிக்க வேண்டும். அனுபவமற்ற உணவு தேடுபவர்கள் கூட்டிற்கு அருகில் வேலை செய்கிறார்கள். பின்னர் வயது மற்றும் அனுபவத்துடன் கலைந்து செல்கிறார்கள்.

சில பயிர்கள் அல்லது சில பயிர்களின் குறிப்பிட்ட வகைகள் தேனீக்களுக்கு அழகற்றவை. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், ஒரு தீர்வு, அந்தப் பகுதியை தேனீக்களால் நிரப்புவதாகும். தேனீக் களுக்கு தண்ணீர் வழங்குங்கள். தேனீ கூட்டங்கள் ஆண்டு முழுவதும் சுறுசுறுப்பாக இருக்கும். குறிப்பிட்ட பயிர் களை மகரந்தச் சேர்க்கை செய்ய தேனீக்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மகரந்தச் சேர்க்கை செய்யப்பட வேண்டிய பூக்களின் சாறுகள் சர்க்கரை பாகில் தேனீக்களுக்கு அளிக்கப் படுகின்றன. தேனீக்கள் பயிரின் நறுமணத்திற்கு ஏற்ப, பூக்களைப் பார்வையிட்டு மகரந்தச் சேர்க்கையை மேற்கொள் கின்றன.

● **பூச்சிக்கொல்லிகளிலிருந்து தேனீக்களைப் பாதுகாத்தல் :** உட்புற உறையை அகற்றிய பிறகு, தேனீக்களை கூட்டின் நுழை வாயில் மற்றும் மேற்புறத்தை திரையிடுவதன் மூலம் கூட்டிற்குள் அடைத்து வைப்பது, திறந்த கூட்டத்தில் பூச்சிக் கொல்லியால் நேரடியாகத் தாக்கப்படாத வரை, அதிக வெப்பமடைவதைத் தடுக்கலாம் மற்றும் இழப்புகளைக் குறைக்கலாம்.

● **குறைந்தபட்ச கூட்ட வலிமை :** தேனீக்களின் கூட்டத்தை அல்லது கூட்டத்தை உள்ளடக்கிய ஒவ்வொரு கூட்டமும் ஒரு குடும்ப அலகு மற்றும் ஒரு முட்டையிடும் ராணி, சில ட்ரோன்கள் மற்றும் பல ஆயிரம் வேலைக்கார தேனீக்களைக் கொண்டு உள்ளது.

வேலைக்கார தேனீக்கள் பயிர்களை மகரந்தச் சேர்க்கை செய்வதால், பருவங்கள் முழுவதும் அவற்றின் எண்ணிக்கை எவ்வாறு மாறுகிறது என்பதைப் புரிந்து கொள்வது முக்கியம். வசந்தகாலத்தின் துவக்கத்தில், ஒரு கூட்டத்தில் 10,000-20,000 தொழிலாளர்கள் இருக்கலாம். ஆனால் கோடையில் அந்தக் கூட்டத்தில் 40,000 - 60,000 தொழிலாளர்கள் எண்ணிகை எட்டியிருக்க வேண்டும். இந்த மாதங்களில், கூட்டின் கீழ் பகுதி, அடைகாக்கும் அறை, முட்டைகள், லார்வாக்கள் மற்றும் அடை காக்கும் கூட்டுப்புழுக்களால் நிரப்பப்படுகிறது. அவை சீப்பின் செல்களில் வளர்க்கப்படுகின்றன. பொதுவாக, அடை காக்கும் பகுதி பெரியதாக இருந்தால், தேன் மற்றும் மகரந்தத்திற்கான தேவை அதிகமாகும்.

இதனால் தேனீக்களின் உணவு தேடும் செயல்பாடு அதிகமாகும். இதன் விளைவாக அதிக மகரந்தச் சேர்க்கை ஏற்படுகிறது. மகரந்தச் சேர்க்கை வாடகைக்கு பயன்படுத்தப்படும் கூட்டங்களில் குஞ்சுகள் இருக்க வேண்டும், மேலும் குஞ்சுகளின் அளவு மகரந்தச் சேர்க்கைக் கான கூட்டத்தின் செயல்திறனுக்கான வலுவான அறிகுறியாகும்.

**நிர்வகிக்கப்பட்ட பயிர் மகரந்தச் சேர்க்கையில் உள்ள சவால்கள்**

தேனீ மகரந்தச் சேர்க்கை பயிர் விளைச்சலை அதிகரிக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதிகரித்த மற்றும் நிலையான விவசாய உற்பத்திக்கு தேனீ/பூச்சி ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. இந்தியாவில், மொத்த சாகுபடி பரப்பளவு சுமார் 160 மில்லியன் ஹெக்டேர் ஆகும், மேலும் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு (பாதி இல்லையென்றால்) பகுதிகளில் பூச்சி மகரந்தச் சேர்க்கை தேவைப்படும் என்டோமோபிலஸ் பயிர்கள் உள்ளன. ஒரு ஹெக்டேருக்கு 3 தேனீக்கள் என்ற மிகக் குறைந்த விகிதத்தில், நமக்கு 160 மில்லியன் தேனீக்களின் தேனீக்கள் தேவை. ஆனால் இந்தத் தேவைக்கு எதிராக தற்போது ஒரு மில்லி யனுக்கும் குறைவான தேனீக்களின் தேனீக்களின் காலனிகள் மட்டுமே உள்ளன.

ஒட்டு மொத்தமாக தேனீ வளர்ப்பு ஊக்கமடைந்து, தேனீக்களின் எண்ணிக்கை பெருகி நிர்வகிக்கப்பட்டால் மட்டுமே இது சாத்திய மாகும். மேலும், மகரந்தச் சேர்க்கை செய்யும் பூச்சிகளின் பரவல் மற்றும் மிகுதியைத் தீர்மானிக்க வெவ்வேறு வேளாண் காலநிலை மண்டலங்களை ஆய்வு செய்வது மிகவும் அவசியம். இதனால் வெவ்வேறு மண்டலங்களுக்கு குறிப்பிட்ட மகரந்தச் சேர்க்கைகள் பெருகி நிர்வகிக்கப்படுகின்றன. குறைவான மிகுதியாக உள்ள பகுதிகள் தேனீ வளர்ப்பு நிலையங்களுடன் கூடுதலாக வழங்கப்பட வேண்டும். மகரந்தச் சேர்க்கை என்பது இயற்கை வழங்கும் ஒரு சேவையாகும். அதை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறோம்.

மேலும் அதை இழக்கத் தொடங்கும் வரை நாம் பெரும்பாலும் ஊக்குவிப்பதில்லை. உணவுப் பாதுகாப்பின் கட்டாய கோரிக்கை களை பூர்த்தி செய்ய காட்டு சுற்றுச்சூழல் அமைப்புகள் அதிகளவில் மனித ஆதிக்கம் செலுத்தும் பயன்பாடுகளுக்கு மாற்றப்படுவதால், உணவுப் பாதுகாப்பிற்கு எந்த மகரந்தச் சேர்க்கை சேவைகள் மிக முக்கியமானவை, நிலையான விவசாய முறைகளில் மகரந்தச் சேர்க்கை சேவைகளை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்வது நமக்கு மிகவும் முக்கியமானது.

கட்டுரையாளர் : **ச.பூர்ணிமா, உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. Email : poorny29@gmail.com.**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741